செய்தி வெளியீடு எண்: 164 நாள் : 18.03.2016

<u>செய்தி வெளியீடு</u>

**<u>தேர்தல் விதிமீறல்—உரிய ஆவணங்கள் இல்லாததால் ரூ.9.39 கோடி பறிமுதல் – பறக்கும் படை, கண்காணிப்புக் குழு நடவடிக்கை—சுவர் விளம்பரம், பேனர், போஸ்டர் தொடர்பாக 652 வழக்குகள் பதிவு</u>**

********

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படி அமைக்கப்பட்ட, பறக்கும்படை, நிலையான கண்காணிப்புக்குழு ஆகியவை, தமிழ்நாட்டில் தேர்தல் சுமூகமாக, அமைதியாக 100 சதவீதம் வாக்குபதிவுடன் நடைபெற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தேர்தல் நடத்தை விதிமுறையின் கீழ், உரிய ஆவணங்கள் இல்லாமல் 16.3.16 அன்று எடுத்துச் சென்ற ரொக்கம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கரூர் மாவட்டத்தில் ரூ.1.56 லட்சம், நீலகிரி மாவட்டத்தில் ரூ.1.20 லட்சம், திருப்பூரில் ரூ.4.5 லட்சம், புதுக்கோட்டையில் ரூ.16 லட்சம், தர்மபுரி பெண்ணாகரத்தில் ரூ.1.20 லட்சம், திருநெல்வேலியில் ரூ.2.18 லட்சம், சேலம் மாநகரில் ரூ.8 லட்சம், கிருஷ்ணகிரியில் ரூ.1லட்சம், மதுரையில் ரூ.2.74லட்சம் உட்பட மொத்தம் ரூ.42,23,550/— ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் நீலகிரி மாவட்டத்தில் 72 ரைஸ் குக்கர்கள், திருச்சி மாநகரில் 298.790 கிராம் தங்ககட்டி, வேலூரில் 300 புடவைகள், சேலம் மாநகரில் 105 எண்ணிக்கையில் வெள்ளி பொருட்கள், கோவை, மதுரை பகுதிகளில் பல்வேறு மதுவகைகள் கைப்பற்றப்பட்டன. விருதுநகரில் 197 புடவைகளும், மதுரையில் 85 கேஸ் ஸ்டவ்களும், 50 கேஸ் லைட்டர்களும் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

தேர்தல் நடைமுறைகளை மீறி அனுமதியில்லாமல் கட்சி விளம்பரம், கட்சி கொடியினை ஆட்சேபணை பகுதியிலிருந்து அகற்றாதது, கட்சி கொடி கம்பம் வைத்தது, கட்சி கொடி கட்ட பள்ளம் தோண்டியது, வாகனத்தில் கட்சி கொடியுடன் சென்றது போன்றவற்றிற்காக கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல் கட்சியினர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

நிலையான கண்காணிப்புக் குழுவினர் மேற்கொண்ட சோதனையில் திருப்பூரில் ரூ.2.98 லட்சம், திருச்சியில் ரூ.6.20 லட்சம், வேலூரில் ரூ.28 லட்சம் என ரூ.44,72,902/— ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இதுவரை கண்காணிப்புக்குழுவினரால் ரூ.5.89 கோடியும், பறக்கும் படையினரால் ரூ.3.50 கோடியும் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்றதால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் விதிகளை மீறியதாக 18.03.16 வரை 1,82,188 புகார்கள் பெறப்பட்டதில், 93,868 புகார்கள் சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டதால் நடவடிக்கைகள் முற்றுபெற்றுவிட்டன. இதுவரைஅனுமதியில்லாமல் சுவர் விளம்பரம், பேனர்கள், போஸ்டர் வைத்தது தொடர்பாக 652 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வாகனங்களை அனுமதி பெறாமல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தியதாக 1,328 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,196 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**